சிகரத்தின்

# தினத் தென்றல்

SIGARATTHIN DHINATHENDRAL தமிழ் சமுதாயத்தின் குரல் TAMIL DAILY Rs. 4

Vol:13 ● Issue:353 13.10.2026 ● செவ்வாய்க்கிழமை ● சென்னை ● கோவை ● திருச்சி ● திருநெல்வேலி ● பக்கம் 6 ● விலை ரூ.4





**தவெகவுடன் பாமக இணைந்தால் விசிக வெளியேறும்**

**சாதி விவரம் கேட்கக்கூடாது: உயர்நீதிமன்றம் உத்தரவு**

**கூட்டணிகளை அவமதித்ததுதான் திமுக தோல்விக்கு காரணம்**












## மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தலில் வெற்றி

# மரகதம் குமரவேல், சத்யபாமா எம்.எல்.ஏ.க்களாக பதவியேற்பு

**○ சபாநாயகர் ஜே.சி.டி. பிரபாகர் பதவி பிரமாணம் ○ முதலமைச்சர் விஜய் வாழ்த்து**







**சென்னை, அக்.13:** மதுராந்தகம், தாராபுரம் தொகுதி இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற மரகதம் குமரவேல், சத்யபாமா ஆகியோர் த.வெ.க. எம்.எல்.ஏ.களாக பதவியேற்றுக் கொண்டனர். அவர்களுக்கு சபாநாயகர் ஜே.சி.டி. பிரபாகர் பதவிப் பிரமாண மும், ரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.

தமிழக சட்டசபைக்கு கடந்த ஏப்ரல் மாதம் நடந்த பொதுத்தேர்தலில், 108 இடங்களை வென்று தனிப்பெரும் கட்சியாக த.வெ.க. உருவெடுத்தது. தி.மு.க. கூட்டணியில் இருந்த காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மற்றும் 2 கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஆதரவுடன் த.வெ.க. கூட்டணி ஆட்சி அமைத்தது. முதலமைச்சராக விஜய் பதவியேற்றார். அவருடைய தலைமை யிலான அமைச்சரவையில் காங்கிரஸ், வி.சி.க., இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகள் இடம் பெற்று ள்ளன. இந்த நிலையில் அண்ணா தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் மரகதம் குமரவேல் (மதுராந்தகம்), சத்தியபாமா (தாராபுரம்) ஆகியோர் 10 நாட்களில் தங்களுடைய எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்து விட்டு, த.வெ.க.வில் இணைந்தனர். காலியான அந்த இரு தொகுதிகளுக்கு, தேர்தல் ஆணையம் இடைத்தேர்தல் அறிவித்தது. ஆளும் கட்சியான த.வெ.க., அண்ணா தி.மு.க., தி.மு.க., கம்யூனிஸ்ட், நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் களம் இறங்கியதால் 5 முனை போட்டி ஏற்பட்டது. முதலமைச்சர் விஜய், தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின், அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிகள், நாம் தமிழர் கட்சி ஒருங்கிணை ப்பாளர் சீமான் மற்றும் அமைச்சர்கள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 6-ந்தேதி வாக்குப்பதிவு நடந்தது. 9ந் தேதி வாக்கு எண்ணிக்கை நடந்தது. இதில், 2 தொகுதிகளிலும் ஆளும் த.வெ.க. சார்பில் வேட்பாளர்களாக களம் இறக்க ப்பட்ட மரகதம் குமரவேல், சத்திய பாமா ஆகியோர் வெற்றி பெற்றனர்.

த.வெ.க. வேட்பாளர் மரகதம் குமரவேல் மதுராந்தகம் தொகுதியில், 74 ஆயிரத்து 48 வாக்குகள் பெற்று அமோக வெற்றி பெற்றார். தாராபுரம் தொகுதியில், த.வெ.க. வேட்பாளர் சத்திய பாமா 66,841 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். அண்ணா தி.மு.க.விடமி ருந்து இந்த 2 தொகுதிகளையும் தற்போது தவெக கைப்பற்றியது. மேலும் த.வெ.க. சந்தித்த முதல் இடைத்தேர்தலி லேயே முத்திரை பதித்து ள்ளது குறிப்பிடத்தக்கதாகும். 234 உறுப்பி னர்களை கொண்ட தமிழக சட்டசபையில் தற்போது ஆளும் கட்சி த.வெ.க.வுக்கு சபாநாயகர் உள்பட 107 எம்.எல்.ஏ.க்கள் உள்ளனர்.

தி.மு.க.வுக்கு 59. அண்ணா தி.மு.க.வுக்கு 41, காங்கிரசுக்கு 5, பா.ம.க.வுக்கு 4. இந்திய கம்யூனிஸ்டு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு. ஐ.யூ.எம்.எல்., விடுதலை சிறுத்தைகள் ஆகிய கட்சிகளுக்கு தலா 2, பா.ஜனதா, தே.மு.தி.க., அ.ம. மு.க. ஆகிய கட்சி களுக்கு தலா 1 எம்.எல்.ஏ. என்ற அளவில் சட்டசபை யில் கட்சிகளின் பலம் உள்ளது. தற்போது மதுரா ந்தகம் மற்றும் தாராபுரம் இடைத்தேர்தலில் த.வெ.க. வெற்றி பெற்ற தைத் தொடர்ந்து சட்டசபையில் அக்கட்சியின் பலம் 109 ஆக அதிகரித்துள்ளது. தமிழக சட்டசபைக்கு தற்போது 229 எம்.எல்.ஏ. உள்ள நிலையில் பெரு ந்துறை, திருச்சி கிழக்கு, அம்பா சமுத்திரம், கரூர், விராலி மலை ஆகிய 5 தொகுதிகள் காலியாக உள்ளன.

இதைத் தொடர்ந்து இடைத்தேர்தலில் த.வெ.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மரகதம் குமரவேல், சத்யபாமா ஆகியோர் இன்று எம்.எல்.ஏ.க்களாக பதவி யேற்றுக் கொண்டனர்.

தமிழக சட்டப்பேரவைத் தலைவர் ஜே.சி.டி பிரபாகர் அறையில், அவரது முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மரகதம் குமரவேல், சத்யபாமா ஆகியோர் எம்எல்ஏக்களாக வெற்றி பெற்ற சான்றிதழை சபாநாயகரிடம் அளித்த னர். அதைத் தொடர்ந்து மரகதம் குமரவேலும் சத்யபாமாவும் தவெக எம்எல்ஏக்களாக பதவி யேற்றுக் கொண்டனர். அவர்களுக்கு சபாநாயகர் ஜேசிடி பிரபாகர் பதவிப் பிரமாணமும், ரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார். எம்எல்ஏ க்களாக பதவியற்றுக் கொண்ட இருவரும் அதற்கான புத்தகத்தில் கையெழுத்திட்டனர். எம்.எல்.ஏ.க்களாக பதவி யேற்றுக் கொண்ட சத்ய பாமா மற்றும் மரகதம் குமரவேலுக்கு, சபாநாயகர் ஜே.சி.டி. பிரபாகர் தனது வாழ்த்துகளை தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் அமை ச்சர்கள் ஆனந்த், செங்கோட்டையன், ஆதவ், அருண்ராஜ், மரிய வில்சன், ராஜ்மோகன் மற்றும் அண்ணா தி.மு.க.விலிருந்து விலகி த.வெ.க.வில் இணைந்த முன்னாள் அமைச்சர்கள் உடுமலை ராதாகிருஷ்ணன், சி. விஜய பாஸ்கர் ஆகியோர் உடனிரு ந்தனர்.

இதைத் தொடர்ந்து எம்.எல்.ஏ.க்க ளாக பதவி யேற்றுக் கொண்ட மரகதம் குமர வேல் மற்றும் சத்திய பாமா ஆகிய 2 பேரும் முதலமைச்சர் விஜய்யை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

---

# சிறைச்சாலையாக டில்லி மாற்றப்பட்டுள்ளது!

**○ ராகுல்காந்தி குற்றச்சாட்டு**



**புதுடில்லி, அக்.13:** ஞானேஷ் குமாருக்கு எதிராக சுப்ரீம் கோர்ட்டை நோக்கி இந்தியா கூட்டணி கட்சி பேரணி செல்வதற்கு முன்னதாக ராகுல் காந்தி செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:-

வாக்குகள் திருடப்பட்டதற்கு எதிராக டில்லியில் பல நாட்களாகப் போராட்டம் நடைபெற்று வருகிறது. டெல்லிக்குள் மக்கள் நுழைவது தடுக்கப்படுகிறது. அது ஒரு சிறைச்சாலைபோல மாற்றப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சிகள் தேர்தல் ஆணைய அலுவலகத்துக்கு சென்றபோது போலீஸ் தடுத்தது. 2-வது நாள் ஜந்தர் மந்தரில் போராட்டம் நடத்த அனுமதி கேட்டோம். மறுத்துவிட்டனர். எதிர்க்கட்சிகள் தேர்தல் ஆணைய அலுவலகத்துக்கு சென்றபோது போலீஸ் தடுத்தது. ஞானேஷ்குமார் ஏன் பதவி விலகவில்லை என கேள்வி கேட்டால் தாக்குகிறார்கள். போராட்டக்காரர்களின் பக்கம்தான் நியாயம் உள்ளது என்று 50 % போலீசார் கூறுகின்றனர். போராட்டத்தில் பங்கேற்க வருவோரை போலீஸ்கார்களை ஏவி மோடி அரசு தடுக்கிறது. மோடி அரசு மிகப்பெரிய தவறை செய்கிறது.

போராட்டத்தில் ஈடுபட்ட பெண்களை பாஜக, ஆர்.எஸ்.எஸ் குண்டர்கள் வைத்து தாக்கியது. தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாரை மோடி அரசு பாதுகாக்கிறது.

20,000 முதல் 30,000 வரையிலான காவல்துறையினரை வீதிகளில் பணியில் அமர்த்த வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். அரசு ஒரு பெரும் தவறைச் செய்கிறது. ஏனென்றால் ஞானேஷ் குமாரின் பாதுகாப்பை மோடிஜி உறுதி செய்ய விரும்புகிறார் என்பதை நாங்கள் நாட்டுக்குக் காட்ட விரும்புகிறோம். அவருக்கு எவ்வளவு பாதுகாப்பு அளிக்கப்படுகிறதோ, அந்த அளவிற்கு நாங்கள் இறுதியில் அவரது கட்டுப்பாட்டாளரைச் சென்றடைவோம். அரசியலமைப்பு தாக்கப்படுகிறது... இந்த எதிர்ப்பு ஒரு நாள் நிகழ்வல்ல; அது தொடரும்

காவல்துறை, பாதுகாப்பு படை வீரர்கள், இந்திய மக்கள் ஒரு பக்கத்திலும், 'வாக்குத் திருட்டுக்கு' வழிவகுத்து நாட்டைக் கடத்திச் செல்லும் நரேந்திர மோடி, அமித் ஷா, அஜித் டோவல், ஞானேஷ் குமார் மற்றும் தேர்தல் ஆணையத்தின் 4-5 உறுப்பி னர்கள் மறு பக்கத்திலும் உள்ளனர். ஞானேஷ் குமார் ஏன் ராஜினாமா செய்ய வில்லை? ஞானேஷ் குமார், நீங்கள் உங்கள் தூக்கத்தை இழந்துவிட்டீர்கள்.

நாங்கள் உங்களை விட்டுவைக்க மாட்டோம். உங்கள் கடந்த காலத்தையும் ஊழலையும் நாங்கள் அறிவோம், நாங்கள் காத்திருக்கிறோம்.

நரேந்திர மோடியிடம் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், உங்கள் அரசாங்கத்தின் 200 அதிகாரிகள் எங்களுடன் தொடர்பில் இருந்து எங்களுக்குத் தகவல் தெரிவித்து வருகின்றனர், இதில் அமலாக்கத்துறை, சிபிஐ, வெளியுறவு அமைச்சகம் ஆகியவற்றில் உள்ள வர்களும் அடங்குவர்.

உண்மை எங்களுடன் இருப்பதால் நாங்கள் சோர்வடைய மாட்டோம் தொடர்ந்து போராடுவோம். ஒரே நாளில் மாற்றம் வராது, தொடர்ந்து போராட வேண்டும் என கூறினார்.

---

# பொய் பிரசாரங்களை முறியடித்து வெற்றி!

**○ சத்தியபாமா, மரகதம் குமரவேல் கூட்டாக பேட்டி**



**சென்னை, அக்.13:** மதுராந்தகம், தாராபுரம் தொகுதி இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற தவெக எம்.எல்.ஏ.க்கள் பதவியேற்றனர். சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் முன்னிலையில், மதுராந்தகம் எம்.எல்.ஏ.வாக மரகதம் குமரவேல், தாராபுரம் எம்.எல்.ஏ.வாக சத்தியபாமாவும் பதவி யேற்றனர்.

அதன் பின்னர் சத்திய பாமா, மரகதம் குமரவேல் கூட்டாக செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:- ஹாட்ரிக் வெற்றிக் கொடுத்த மதுராந்தகம் தொகுதி மக்களுக்கு கோடான கோடி நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இடைத்தேர்தலில் வாய்ப்பளித்த முதல்வர் விஜய்க்கு நன்றி. எதிர்க்கட்சியினர் ஒரு பெண் என்றும் பாராமல் எங்கள் மீது தேர்தல் பிரச்சாரத்தில் அவதூறு பரப்பினர். பொய் பிரச்சாரத்தால் மன உளைச்சலுக்கு நாங்கள் ஆளானோம். ஆனால் இடைத்தேர்தலில் ஓட்டுக்கு பணம் கொடுக்காமல் வெற்றி பெற்றுள்ளோம். தொகுதி மக்களின் கோரிக்கைகளை நிச்சயம் நிறைவேற்றுவோம். முழுக்க முழுக்க தளபதி விஜய்க்காக வந்த வாக்கில் தான் நான் வெற்றி பெற்றுள்ளேன் என்று கூறினார்.

சத்தியபாமா கூறியதாவது, "தாராபுரம் தொகுதியில் வெற்றியை கொடுத்த மக்களுக்கு மனமார்ந்த நன்றி.. மக்களே உற்சாகமாக வெற்றியை கொண்டாடு றாங்க.. தண்ணீர் பிரச்ச னைக்கு கூடிய விரைவில் தீர்வு காணப்படும். இந்த வெற்றி தமிழ்நாட்டு மக்களுக்கு ஒரு எழுச்சியை ஏற்படுத்தக்கூடிய வெற்றி என்று" கூறினார்.

---

# 2 சிறுமிகள் புகார்: ஜெம் வீரமணி மீது மேலும் ஒரு வழக்கு



**சென்னை, அக்.13:** ஏழைச் சிறுமிகளை பாலியல் வன் கொடுமை செய்த குற்றச் சாட்டில் ஜெம் கிரானைட் அதிபர் வீரமணி கைது செய்யப் பட்டார். அவர் மீது 20-க்கும் மேற் பட்டோர் புகார் தெரிவித்தனர். ஏற்கெனவே ஜெம் வீரமணி மீது 5 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் தற்போதுமேலும் ஒரு வழக்கு ஆறாவதாக நேற்று முன் தினம் பதிவு செய்யப்பட்டது.

இவ்வழக்கில் பாதிக் கப்பட்ட இரு சிறுமிகளின் வாக்கு மூலத்தின் மீது ஒரே வழக்காக இந்த நடவடிக்கை மேற் கொள்ளப் பட்டுள்ளது. ஜெம் வீரமணி வீட்டில் போலீஸார் நேற்று மீண்டும் சோதனை நடத்தி முக்கிய ஆவணங்களை பறிமுதல் செய்தனர்.

சிகரத்தின் தினத்தென்றல்

## தமிழக பள்ளிக் கல்வித்துறை சார்பில்
# மாநில அளவில் கலைத் திருவிழா போட்டி: திசையன்விளை ஸ்டெல்லா மாரீஸ் பள்ளிக்கு பரிசு




**திசையன்விளை, அக்.13:** தமிழக பள்ளிக்கல்வித்துறை சார்பில் ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கான மாநில அளவிலான கலைத்திருவிழா போட்டிகள் தஞ்சாவூர் மாவட்டத்தில் நடைபெற்றது.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு பயிலும் மாணவ மாணவிகள் பங்கேற்றனர்.

இதில் நெல்லை மாவட்டம் திசையன்விளை ஸ்டெல்லா மாரீஸ் மகளிர் உயர்நிலைப் நிலைப்பள்ளி மாணவிகள் நடன போட்டியில் இரண்டாம் இடம் பெற்றுள்ளனர். வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பள்ளிக் கல்வித் துறை சார்பில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

வெற்றி பெற்ற மாணவிகளை பள்ளி தாளாளர் அருட்சகோதரிரெக்ஸிட்டா தலைமையாசிரியை அருட்சகோதரி நித்யா ஆகியோர் பாராட்டினர்.

## மேட்டூர் அருகே நின்றிருந்த
# தனியார் பேருந்து மீது அரசு பேருந்து மோதி விபத்து: 26 பேர் காயம்

**செலம், அக்.13:** மேட்டூரில் இருந்து திங்கள்கிழமை காலை ஈரோட்டிற்கு தனியார் பேருந்து பயணிகளுடன் சென்று கொண்டிருந்தது. பேருந்து நவபட்டி அருகே பயணிகளை ஏற்றுவதற்காக நின்றிருந்தது. அப்போது மேட்டூரில் இருந்து 40 பயணிகளுடன் கோவை நோக்கி அரசு பேருந்து சென்று கொண்டிருந்தது.

தனியார் பேருந்தை முந்த முயன்றபோது எதிரே வந்த இரண்டு இரு சக்கர வாகனங்கள் மீது மோதாமல் செல்வதற்காக அரசு பேருந்து ஓட்டுநர் பேருந்தை இடது புறமாக திருப்பினார்.

எதிர்பாராத விதமாக கட்டுப்பாட்டை இழந்த அரசு பேருந்து, பேருந்து நிறுத்தத்தில் பயணிகளை ஏற்றிக் கொண்டிருந்த தனியார் பேருந்து மீது வேகமாக மோதியது. இதில், அரசு பேருந்து முன் பகுதி பலத்த சேதமடைந்தது. அரசு பேருந்தில் பயணம் செய்த சந்திரா, வாசுகி (28), பிரியா (38), சபீதா (27), கோபிகா (27), ஜீவிதா (19), ரமணி (34) உள்பட 8 பெண்களும் அரசு பேருந்து ஓட்டுநர் கோபி (46), நடத்துநர் விஸ்வநாதன் (55) உள்பட 16 ஆண்களும், ஜாய் சதன் (11), ஆகாஷ் (6) என்ற இரண்டு சிறுவர்களும் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் மேட்டூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். நான்கு பேர் மட்டும் உள் நோயாளிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர். மற்றவர்கள் சிகிச்சைக்கு பிறகு வீடு திரும்பினர். விபத்து காரணமாக மேட்டூர் பவானி சாலையில் சுமார் 30 நிமிட நேரம் போக்குவரத்து பாதித்தது. தகவல் அறிந்த மேட்டூர் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர். விபத்துக்குள்ளான பேருந்துகளை அப்புறப்படுத்தி போக்குவரத்தை சீர் செய்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக மேட்டூர் காவல் உதவி ஆய்வாளர் ஈஸ்வரன் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகிறார்.

## க்ரைம் கார்னர்

### சேலத்தில் ரூ.14 கோடி மதிப்பிலான வெள்ளிப் பொருட்கள் கொள்ளை; போலீசார் விசாரணை

**சேலம், அக்.13:**

சேலத்தில் உள்ள சினிமா நகர் பகுதியில் பாலசுப்பிரமணியம் என்பவருக்கு சொந்தமான வெள்ளி பொருட்கள் இருப்பு வைக்கும் குடோன் அமைந்துள்ளது. கொலுசு, மெட்டி, அரைஞாண் கொடி, காப்பு உள்ளிட்ட வெள்ளிப் பொருட்கள் அங்கு வைக்கப்பட்டிருந்தன. தமிழகத்தில் உள்ள பிற மாவட்டங்கள் மட்டுமின்றி, வெளிமாநிலங்களுக்கும் விற்பனை செய்து வருகிறார்.

காரில் வந்த முகமூடி அணிந்து வந்த 4 பேர் கொண்ட மர்ம நபர்கள், காவலாளி தாக்கி, அங்கேயே கட்டிப்போட்டுள்ளனர். மேலும், சிசிடிவி கேமராக்களை ஸ்பிரே அடித்து மறைத்துள்ளனர். குடோனின் உள்ளே சென்ற அந்த கும்பல் 600 கிலோ வெள்ளிப்பொருட்களை திருடிச் சென்றனர். இதன் மதிப்பு ரூ.14 கோடியாகும். இந்த சம்பவம் தொடர்பாக போலீசாருக்கு தகவல் அளிக்கப்பட்டது. மாநகர போலீஸ் கமிஷனர் ஏ.ஜி.பாபு தலைமையிலான போலீசார், மோப்ப நாய்கள் மற்றும் தடயவியல் நிபுணர்களுடன் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று ஆய்வு நடத்தினர். இந்த கொள்ளை சம்பவத்தில் வடமாநில கொள்ளையர்கள் ஈடுபட்டிருக்கலாம் என்ற கோணத்தில் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

### கோவையில் 7 கிலோ கஞ்சா பறிமுதல்: 14 பேர் கைது



**கோவை, அக்.13:** கோவையில் 228 இடங்களில் நடத்தப்பட்ட சோதனையில் 7 கிலோ கஞ்சா, மெத்தாம்பெட்டமைன் மற்றும் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு, 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## புதிய குடும்ப அட்டை மற்றும் எரிவாயு இணைப்பு கோரி மாவட்ட ஆட்சியரிடம் மனு



தென்காசி மாவட்டம் தென்காசி நகர பகுதியில் புதிய குடும்ப அட்டைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு ஓராண்டாகியும் புதிய குடும்ப அட்டை கிடைக்கவில்லை காரணம் கேட்டால் அதிகாரிகளால் தொடர்ந்து குடும்ப அட்டைக்கு விண்ணப்பவர்களுக்கு புதிய எரிவாயு இணைப்பு வேண்டும் என்ற வாய்மொழி உத்தரவால் தொடர்ந்து மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டு வந்தது. இதனால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் தொடர்ந்து கோரிக்கை வைத்தார்கள். அதைத் தொடர்ந்து துறை சார்ந்த அதிகாரிகளை நாமும் தொடர்பு கொண்டு வலியுறுத்தி வந்தோம். காலம் கடந்தும் உரிய நடவடிக்கை எடுக்காததால் நேற்று மாவட்ட ஆட்சித் தலைவரிடம் பாதிக்கப்பட்ட பெண்களோடு சேர்ந்து புதிய குடும்ப அட்டைக்கு சிலிண்டர் இணைப்பு வேண்டும் என்ற கட்டுப்பாட்டை நீக்க வேண்டும் என்று வலியுறுத்தி சிலிண்டருடன் கோரிக்கை மனு வழங்கப்பட்டது. உடன் குருசாமி, 18 வது வார்டு mc ஜாஹிர் மற்றும் பொதுமக்கள் நகர மன்ற உறுப்பினர் ராசப்பா ஆகியோர் இருந்தனர்.

## 2,100-ம் ஆண்டுக்குள்
# மனிதகுலம் அழியும் அபாயம் உள்ளது: ஆய்வில் எச்சரிக்கை

**லண்டன், அக்.13:** உலகில் அதிகரித்து வரும் அணு ஆயுதப் போர் அபாயங்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தொழில்நுட்பத்தின் தவறான பயன்பாடு ஆகியவை எதிர்காலத்தில் மனிதகுலத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக அமையக்கூடும் என்று பிரபல மருத்துவ இதழான 'லான்செட்' வெளியிட்டுள்ள புதிய ஆய்வறிக்கை எச்சரித்துள்ளது

.2100-ம் ஆண்டுக்குள் மனிதகுலத்தின் இருப்புக்கே ஆபத்து ஏற்படக்கூடிய சூழல் உருவாகலாம் என ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அணு ஆயுத மோதல்கள் உலக அளவில் பேரழிவை ஏற்படுத்தும் அபாயம் கொண்டுள்ளன.



அதேபோல், ஏஐ தொழில்நுட்பம் பொறுப்பற்ற முறையில் பயன்படுத்தப்பட்டால் அதன் விளைவுகள் மிகக் கடுமையாக இருக்கக்கூடும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தொழில்நுட்பப் பயன்பாடு: இந்த அபாயங்களைத் தவிர்க்க உலக நாடுகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டியது அவசியம் என்றும் ஆய்வறிக்கை வலியுறுத்துகிறது. சர்வதேச ஒத்துழைப்பு, பொறுப்பான தொழில்நுட்பப் பயன்பாடு மற்றும் உரிய கொள்கை முடிவுகள் மூலம் எதிர்கால அச்சுறுத்தல்களைக் குறைக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. காலநிலை மாற்றம், காற்று மாசுபாடு, தொற்று நோய்கள், ஊட்டச்சத்துக் குறைபாடு உள்ளிட்ட மேலும் பல்வேறு அச்சுறுத்தல்களும் அந்த ஆய்வறிக்கையில் பட்டியலிடப்பட்டுள்ளன.

மிகக் கடுமையாக இருக்கக்கூடும்: எனினும், 2100-ம் ஆண்டுக்குள் மனிதகுலம் அழிந்துவிடும் என்று இந்த ஆய்வறிக்கை உறுதியாகக் கூறவில்லை.

இத்தகைய அபாயங்கள் நிகழும் சாத்தியம் குறைவாக இருந்தாலும், அவற்றின் விளைவுகள் மிகக் கடுமையாக இருக்கக்கூடும் என்பதால் உலக நாடுகள் ஒருங்கிணைந்து தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

## "விசிக அங்கம் வகிக்கும் தவெக அணிக்கு
# பாமகவினர் எப்படி வாக்களிப்பர்?: திருமாவளவன்

**சென்னை, அக்.12:** திண்டிவனத்தில் நேற்று (அக்.11) நடந்த தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டின் தீர்மான விளக்கப் பொதுக்கூட்டத்தில் பேசிய திருமாவளவன், "தவெக உடன் இன்றைக்கு உள்ள கூட்டணி என்பது காலம் போட்ட கணக்கு. பழம் நழுவி பாலில் விழுந்த கதையாக கூட்டணி அரசு உருவாகி விசிகவின் மடியில் வந்து விழுந்துள்ளது. 25 ஆண்டுகளுக்கு முன்பே ஆட்சியில் பங்கு அதிகாரத்தில் பங்கு என்று பேசியவன் நான். காலம் மாறிவரும் சூழலில் கூட்டணியை தக்க வைக்கும் முயற்சியை திமுக எடுக்கவில்லை.

கூட்டணி ஆட்சி என்ற கோரிக்கை வலுப்பெற்ற போது அதற்கு இணங்கி, திமுக தனது கூட்டணிக் கட்சிகளை தக்க வைத்திருக்க வேண்டும். திமுக தன்னை சுய விமர்சனம் செய்யவில்லை. இடைத்தேர்தலில் இரண்டாம் இடத்துக்கு வந்ததே வெற்றி என்று சொல்கிறார்கள். இரண்டாம் இடமே போதுமா? வெற்றி பெற வேண்டாமா? வெற்றி பெற கூட்டணிக் கட்சிகள் தேவைப்படுகிறது. எந்தக் கட்சியை வைத்து வெற்றி பெற முடியும் என்ற



கூட்டணிக் கணக்கை போட வேண்டும்.

இடைத்தேர்தலில் எந்தக் கட்சிக்கும் ஆதரவு இல்லை என பாமக சொல்லிவிட்டது. ஆனால், மதுராந்தகத்தில் பாமகதான் தவெகவுக்கு வாக்களித்துவிட்டது என சொல்கிறார்கள். யார் இதுகுறித்து வாக்குச்சாவடி வாரியாக ஆய்வு செய்தது. இது வன்னியர்கள் அதிகம் உள்ள வாக்குச்சாவடி, இது பட்டியலினத்தவர் அதிகம் உள்ள வாக்குச்சாவடி என யாராவது ஆய்வு செய்தார்களா?

ஒரு தம்பி எனக்கு தகவல்கள் அனுப்பியிருந்தார். வன்னியர்கள் அதிகம் உள்ள ஒரு வாக்குச்சாவடியில் அதிகம் வாக்குகளை திமுக வாங்கியுள்ளது என்பது தெரிகிறது.

பாமகவும், பாஜகவும் இருக்கும் அணியில் இருக்க மாட்டோம் என 15 ஆண்டுகளாக திரும்பத் திரும்ப (விசிக) சொல்லி வருகிறோம். நான் இதுபோல சொல்வதால் பாமகவுக்கு நல்லது நடக்கிறது. பாமக உள்ள அணிக்கு விசிக வராது என்பதை காரணமாக காட்டி, அக்கட்சியினர் தங்கள் சமூகத்தை ஒன்று திரட்டுகிறார்கள்.

2011 சட்டப்பேரவைத் தேர்தலுக்குப் பின்னர் தலித் வெறுப்பை பாமக தூக்கிப் பிடித்த காரணத்தால், அக்கட்சியோடு இனி கூட்டணி கிடையாது என்ற நிலைப்பாட்டை எடுத்தோம். எங்களுக்கு இருந்த நல்லிணக்கத்தை தவிர்க்கும் முடிவை ராமதாஸ்தான் எடுத்தார். அதனால்தான் பாமக, பாஜக இரு கட்சிகளும் ஒரே மாதிரியாக சாதிய, மதவாத தேர்தல் உத்தியை கையாளுகிறார்கள். எனவே இந்த இரு கட்சிகளோடு கூட்டணி கிடையாது என அறிவித்தோம்.

நாங்கள் இப்படி சொல்லும் போது விசிக இடம்பெற்றுள்ள தவெக கூட்டணிக்கு பாமகவினர் எப்படி வாக்களிப்பார்கள். இது என்ன கணக்கு? இதற்கு இரு வாக்குச்சாவடிகளை உதாரணமாக காட்டுங்கள். எந்த சூழலிலும் திருமாவளவனுக்கு ஒரு முக்கியத்துவம் கிடைத்துவிடக் கூடாது என்ற நோக்கத்தில் இப்படி பேசுகிறார்கள்.

உளுந்தூர்பேட்டை மாநாட்டுக்கு முன்னர், விசிகவினர் எல்லாம் விஜய் பின்னால் போய்விட்டார்கள். திருமாவளவனோடு யாரும் இல்லை என்றார்கள்.

விசிக கூடாரம் காலி என்றார்கள். ஆனால் உளுந்தூர்பேட்டை மாநாட்டை பார்த்த முதல்வர் விஜய் 'மிரட்டிவிட்டீர்கள் சார்' என்று தொலைபேசியில் பாராட்டி பேசினார். என்மீது விசிகவினர் நம்பிக்கை வைத்துள்ளார்கள்" என்றார்.

# தமிழ்நாட்டில் 3 நாள்களில் வடகிழக்கு பருவமழை!

**சென்னை, அக்.13:** தமிழ்நாட்டில் இன்னும் மூன்று நாள்களில் வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக தமிழ்நாடு அரசின் எல் - நினோ வல்லுநர் குழு உறுப்பினர் பிரதீப் ஜான் தெரிவித்துள்ளார்.



சென்னை உள்பட தமிழ்நாடு முழுவதும் வடகிழக்கு பருவ மழைக்கான முன்னேற்பாட்டு பணிகளை மாநில அரசும் மாவட்ட நிர்வாகங்களும் தீவிரமாக செய்து வருகின்றன. இந்த நிலையில், இன்னும் 3 நாள்களில் வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கான சூழல் நிலவுவதாக பிரதீப் ஜான் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில் தெரிவித்திருப்பதாவது: "இறுதியாக, ஒரு நல்ல செய்தி. வடகிழக்கு பருவமழை அக்டோபர் 15-ஆம் தேதி (ஓரிரு நாள்கள் முன், பின்) தொடங்க வாய்ப்புள்ளது. செப்டம்பர் 21-ஆம் தேதி முதல் சென்னையில் மழை பெய்ய வில்லை. எனவே, சென்னைக்கும் தமிழ்நாட்டின் பிற பகுதிகளுக்கும் நல்ல மழைப்பொழிவு மிகவும் அவசியமாகத் தேவைப்படுகிறது.

வளிமண்டல சுழற்சி ஒன்று தமிழ்நாட்டை நெருங்கி வருவதால், அது வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு சாதகமாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நாம் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்த, நம்மை காக்கவரும் பருவமழையை மனதார வரவேற்போம். இந்த வளிமண்டல சுழற்சியால் புயல் ஆபத்து ஏதுமில்லை" என்று குறிப்பிட்டுள்ளார்.

# லஞ்சம் கொடுத்ததற்கு தானே சாட்சி: மரிய வில்சனுக்கு எதிரான மனு தள்ளுபடி!

**சென்னை, அக்.13:** கடந்த திமுக ஆட்சியில் பள்ளிகளுக்கு அனுமதி பெற லஞ்சம் வாங்கப்பட்டதற்கு தாமே நேரடி சாட்சி என, நிதித்துறை அமைச்சர் மரிய வில்சன் சட்டப்பேரவையில் பேசியிருந்தார்.

இந்நிலையில், திமுக ஆட்சியில் லஞ்சம் கொடுத்ததாக அமைச்சர் மரிய வில்சன் பேசியது தொடர்பாக, மரியவில்சனுக்கு எதிராக வழக்குப்பதிவு செய்யக்கோரி வழக்குரைஞர் கே.சிவசுப்பிரமணியம் சென்னை உயர்நீதிமன்றத்தில் பொதுநல மனு தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில், லஞ்சம் வாங்குவது மட்டுமல்லாமல், கொடுப்பதும் குற்றம் என்பதால், லஞ்ச ஒழிப்பு சட்டத்தின் கீழ் அவருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்யக் கோரி லஞ்ச ஒழிப்புத் துறையிடம் ஆகஸ்ட் 26ஆம் தேதி புகார் அளித்ததாக குறிப்பிட்டுள்ளார். தனது புகாரின் அடிப்படையில், அமைச்சர் மரிய வில்சன் மீது வழக்குப்பதிவு செய்ய லஞ்ச ஒழிப்புத் துறைக்கு உத்தரவிட வேண்டும் என, மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.ஏ. தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வில் விசாரணைக்கு வந்தபோது, மனுவை திரும்பப் பெற்றுக்கொள்ள மனுதாரர் தரப்பில் அனுமதி கோரப்பட்டதால் நீதிபதிகள், மனுவை திரும்பப் பெற அனுமதித்து தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

## தனியார் கல்வி நிறுவனங்கள்

# சாதி விவரம் கேட்க கூடாது: உயர் நீதிமன்றம் உத்தரவு

**மதுரை, அக்.13:** தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் சாதி விவரங்களைக் கேட்கக் கூடாது என்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

விருதுநகரைச் சேர்ந்த விக்ரமன், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு: தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் கல்வி, வேலைவாய்ப்புக்கு விண்ணப்பிக்கும்போது சாதி விவரங்களைக் கேட்கின்றன. கல்வி, வேலைவாய்ப்பின்போது சாதி தகவல்களைத் கேட்பதால் சேர்க்கை, வேலை வாய்ப்புத் தேர்வின்போது பாகுபாட்டுக்கு வழிவகை செய்யும்.



ஒருவரின் சாதி விவரங்களைக் கேட்பது சட்ட விரோதம். எனவே, தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் சாதி விவரங்களைக் கேட்கக் கூடாது என உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறியிருந்தார்.

இந்த மனுவை நீதிபதிகள் சி.வி.கார்த்திகேயன், ஆர். சக்திவேல் அமர்வு விசாரித்து, 'தமிழகத்தில் எந்தவொரு தனியார் கல்வி நிறுவனங்களும், தனியார் நிறுவனங்களும் சாதி விவரங்களை கேட்பதைக் கட்டாயமாக்கக் கூடாது' என உத்தரவிட்டது.

## தவெகவுடன் பாமக இணைந்தால்

# விசிக வெளியேறும்: அமைச்சர் வன்னி அரசு

**திண்டிவனம், அக்.13:** திண்டிவனத்தில் நடந்த விசிக பொதுக்கூட்டத்தில் அமைச்சர் வன்னி அரசு பேசியதாவது:-



தமிழகத்தில் த.வெ.க. கூட்டணியில் பா.ம.க. வந்தால் வி.சி.க.வின் நிலை என்ன? என்று பலர் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். கடந்த 10 ஆண்டுகளாக அதற்கு பதில் சொல்லி பதில் சொல்லி வாயும் வலித்துவிட்டது. கேட்டு கேட்டு காதும் வலிக்கிறது. ஒரே வழிதான். சாதிய மதவாத பா.ம.க., மதவாத பாஜகவோடு விடுதலை சிறுத்தைகள் ஒருபோதும் கூட்டணி இல்லை என்று முழங்கியவர் நம்முடைய தலைவர் திருமாவளவன்.

இப்பொழுதும் சொல்கிறேன். ஒருபோதும் அதற்கான வாய்ப்பில்லை. பா.ம.க. உள்ளே வந்தால் நாங்கள் வெளியே செல்வோம் என்பதுதான் அதனுடைய பிரகடனம். எங்களுக்கு பதவி முக்கியமல்ல. நம்முடைய தலைவர் எதை கட்டளையிடுகிறாரோ அந்த வேலையை செய்வதற்குத்தான் ஒரு அடிமட்ட தொண்டராக இருந்து இந்த இடத்திலே களமாடுகிறோம்.

விடுதலை சிறுத்தைகள் கட்சி தேர்தல் புறக்கணிப்பு பாதையில் நின்ற இயக்கம். எங்களுக்கு இந்த தேர்தல் பாதை முக்கியமல்ல. விடுதலை சிறுத்தைகள் இயக்கம் மற்ற அ.தி.மு.க.. தி.மு.க. போன்ற சராசரி கட்சி அல்ல. இது ஒரு விடுதலை இயக்கம். விடுதலைக்காக களமாடுகின்ற இயக்கம். இந்த இயக்கம் எப்போதும் விடுதலைக்காக, விடுதலையை நோக்கி, விடுதலையை நேசிக்கக்கூடிய இயக்கம். விடுதலைதான் நம்முடைய உயிர் மூச்சு. அந்த வகையில்தான் இந்த மண்ணிலே நாம் ஒவ்வொரு தொண்டராக களமாடுகிறோம்.

இன்றைக்கு தமிழ் தேசியத்தை வைத்து பிழைப்புவாதம் செய்பவர்கள், போலி தமிழ் தேசியவாதிகள், சாதியவாதிகள் இன்றைக்கு பிரபாகரன் பெயரை வைத்துக்கொண்டு பிழைப்புவாதம் செய்தபோது நாம் மட்டும்தான் கொள்கை ரீதியாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

இந்த கொள்கையின் அடித்தளம் என்பது சாதி ஒழிப்பு. நமக்கு தேர்தல்கள் வரும்.. போகும். ஆனால் மக்களுடைய விடுதலைதான் சாதிய ஒடுக்கு முறைகளில் இருந்து விடுதலை, சனாதனத்திலிருந்து விடுதலை. இதுதான் நம்முடைய உயிர் மூச்சு.

இவ்வாறு அவர் பேசினார்.

## சென்னை பூந்தமல்லி – வடபழனி மெட்ரோ

# 5 மணிநேரத்தில் 25,000 பேர் பயணம்!

**சென்னை, அக்.13:** சென்னை பூந்தமல்லி - வடபழனி மெட்ரோ ரயில் தொடக்க நாளில் மட்டும் 5 மணிநேரத்தில் 25,000 பேர் பயணம் செய்துள்ளனர்.

சென்னையில் பூந்தமல்லி - வடபழனி இடையேயான உயர்நிலை மெட்ரோ ரயில் போக்குவரத்தை பிரதமர் நரேந்திர மோடியும், முதல்வர் சி. ஜோசப் விஜய்யும் இணைந்து ஞாயிற்றுக்கிழமை கொடியசைத்துத் தொடங்கி வைத்தனர்.



இதனைத் தொடர்ந்து, நேற்று மாலை 4 மணி முதல் பொதுமக்களுக்கான சேவை தொடங்கப்பட்டது. முதல் நாளான நேற்று, ஆயிரக்கணக்கான மக்கள் அந்த வழித்தடத்தில் பயணம் செய்ய ஆர்வம் காட்டினர்.

இரவு 9 மணி வரையில் 5 மணிநேரத்தில் மட்டும் 25,000-க்கும் அதிகமானோர் பூந்தமல்லி - வடபழனி வழித்தடத்தில் மெட்ரோ ரயிலில் பயணம் செய்துள்ளதாக ரயில்வே நிர்வாகம் தெரிவித்துள்ளது.

பூந்தமல்லி புறவழிச்சாலை மெட்ரோ ரயில் நிலையம் முதல் வடபழனி மெட்ரோ ரயில் நிலையம் வரை 15 கி.மீ. நீளத்திற்கு 11 உயர்மட்ட மெட்ரோ ரயில் நிலையங்களில் முதல்கட்டமாக சேவை தொடங்கப்பட்டுள்ளது.

நேற்று முதல் இரு திசைகளிலும் காலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை மெட்ரோ ரயில் சேவைகள் இயக்கப்படுகிறது.

திங்கள்கிழமை - சனிக்கிழமைகளில் காலை 8 மணி முதல் 11 மணி வரையிலும் மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் 10 நிமிடத்திற்கு ஒருமுறையும் மற்ற நேரங்கள் 15 நிமிடத்திற்கு ஒருமுறையும் ஞாயிறு மற்றும் விடுமுறை நாள்களில் காலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை 15 நிமிடத்திற்கு ஒரு முறையில் ஒரு ரயில் இயக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாள்தோறும் இரு முனையங்களிலிருந்தும் (பூந்தமல்லி புறவழிச்சாலை மெட்ரோ மற்றும் வழித்தடம் 4 வடபழனி மெட்ரோ) கடைசி மெட்ரோ இரயில் சேவை இரவு 9 மணிக்கு புறப்படும்.

## தமிழகத்தில் அரிசி தட்டுப்பாடு ஏதும் இல்லை

# சன்ன ரகம் விலை மட்டும்தான் உயர்ந்துள்ளது: ஆலை உரிமையாளர்கள்

**மதுரை, அக்.13:** தமிழகத்தில் சன்ன ரக அரிசி விலை ஏற்றம் ஏற்பட்டுள்ளதே தவிர, தட்டுப்பாடு ஏதும் ஏற்படவில்லை என தமிழ்நாடு அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து அந்த சங்கத்தின் சங்கத்தின் தலைவர் தினேஷ் சிங், செயலாளர் ராஜேந்திரன், பொருளாளர் சிவலிங்கராஜா ஆகியோர் மதுரையில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழக மக்கள் பெரிதும் விரும்பி உபயோகிக்கும் சன்ன ரக அரிசி தேவைக்கு அண்டை மாநிலங்களான ஆந்திரா, தெலங்கானா, கர்நாடகாவையே நம்பியே இருக்கிறோம். எல்-நினோ தாக்கத்தால், தமிழகத்தில் காவிரி டெல்டாவில் குறுவை சாகுபடி குறைந்துள்ளது.

எப்போதும் பயிரிடும் சுமார் 4.57 லட்சம் ஏக்கர் பரப்பளவுக்கு பதிலாக சுமார் 3.38 லட்சம் ஏக்கர் மட்டுமே பயிரிட முடிந்தது. அதேபோல், அண்டை மாநிலங்களிலும் நெல் பயிரிடும் அளவு குறைந்ததால் வரத்து 30 சதவீதமாக குறைந்துள்ளது.

எனவே, இந்த ஆண்டு தேவைக்கு நெல் கிடைக்காமல் சன்ன ரக அரிசி விலை கிலோவுக்கு ரூ.30 வரை உயர்ந்துள்ளது. இந்த பற்றாக்குறையானது வரும் சம்பா சாகுபடியின் அறுவடைக்காலமான தை மாதத்தில் இயல்பு நிலைக்கு வர அதிக வாய்ப்புள்ளது. எனவே, அரிசி விலை உயர்ந்துள்ளதே தவிர, எந்தவித தட்டுப்பாடும் ஏற்படவில்லை. மத்திய, மாநில அரசின் கிட்டங்கிகளிலும் தேவையான அரிசி இருப்பு உள்ளது. சன்ன ரக நெல்லை விவசாயிகள் கூடுதலாக பயிரிடுவதற்கு ஊக்கம் தரும் வகையில், அதற்கு கூடுதல் விலை கிடைக்கும் என்பதை அரசு விளம்பரப்படுத்த வேண்டும். மேலும், தமிழக பருவநிலைக்கு ஏற்றவகையில் அதிக மகசூல் தரும் சன்ன ரக நெல்லை வேளாண் ஆராய்ச்சி நிலையங்கள் மூலமாக உருவாக்கி விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்.

விவசாயிகளுக்கு நெல் உலர வைக்கும் இயந்திரம், நெல் சேமிக்கும் கிடங்கு உள்ளிட்ட வசதிகளை அதிகரிக்க வேண்டும். இவ்வாறு செய்யும்போது சன்ன ரக நெல்லுக்காக அண்டை மாநிலங்களை நம்பியிருக்கும் நிலை ஏற்படாது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## விடுமுறை நாளையொட்டி

# திருத்தணி முருகன் கோவிலில் குவிந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள்



**திருத்தணி, அக்.13:** திருத்தணி முருகன் கோவிலில் நாள்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் சாமி தரிசனம் செய்கின்றனர். இந்த நிலையில் ஞாயிறு விடுமுறை தினம் என்பதால் ஏராளமான பக்தர்கள் தங்களது குடும்பத்துடன் சாமி தரிசனத்திற்கு வந்திருந்தனர்.

இதனால் கோவில் வளாகம் முழுவதும் பக்தர்கள் கூட்டமாக காணப்பட்டது. பொதுவழியில் மூலவரை தரிசிக்க நீண்ட வரிசையில் 2 மணி நேரம் காத்திருந்து பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர்.

முன்னதாக அதிகாலை 5 மணிக்கு மூலவருக்கு பஞ்சாமிர்த அபிஷேகம், தங்கவேல், தங்ககிரீடம் மற்றும் வைர ஆபரணங்கள் அணிவித்து சிறப்பு தீபாராதனை நடைபெற்றது. மாஸ்டர் பிளான் திட்டத்தில் திருத்தணி முருகன் கோவில் மாடவீதி விரிவாக்க பணிகள் முழுவீச்சில் நடந்து வருகிறது.

இதன் காரணமாக கிழக்கு கோபுரம் வழியாக பக்தர்கள் உள்ளே செல்லாதவாறு இரும்பு தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளது.

தரிசனத்திற்கு வரும் பக்தர்கள் அனைவரும் மேற்கு கோபுரம் வழியாக தரிசனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். கோவிலுக்கு சாமி தரிசனம் செய்ய வரும் மாற்றுத்திறனாளிகள் மேற்கு கோபுரம் அருகில் சாய்தள மரப்பலகை வழியாக உள்ளே சென்று சாமி தரிசனம் செய்து வந்தனர். இந்த நிலையில் சாய்தள மரப்பலகை சேதமடைந்து காணப்படுகிறது. இதனால் தரிசனத்திற்கு வரும் மாற்றுத்திறனாளி பக்தர்கள் சிரமத்துக்கு ஆளாகி உள்ளனர். எனவே கோவில் நிர்வாகம் விரைந்து சாய்தள மரப்பலகையை சீரமைக்க வேண்டும் என்று பக்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## சென்னை மக்களின் குடிநீர் தேவைக்காக

# பூண்டி ஏரியில் இருந்து தண்ணீர் திறப்பு



**ஊத்துக்கோட்டை, அக்.13:** சென்னை மக்களின் குடிநீர் தேவைக்காக பூண்டி ஏரியில் இருந்து புழல், செம்பரம்பாக்கம் ஏரிகளுக்கு தண்ணீர் திறக்கப்பட்டது.

சென்னை நகர மக்களின் முக்கிய குடிநீர் ஆதாரமாக பூண்டி, புழல், செம்பரம்பாக்கம், சோழவரம், கண்ணன்கோட்டை - தேர்வாய் கண்டிகை ஏரிகள் உள்ளன. இந்த 5 ஏரிகளிலும் மொத்தம் 11.757 டி.எம்.சி. தண்ணீரை சேமித்து வைக்கலாம். காலை நிலவரப்படி குடிநீர் ஏரிகளில் 4.095 டி.எம்.சி. தண்ணீர் இருப்பு உள்ளது. இது மொத்த கொள்ளளவில் 34 சதவீதம் ஆகும். வெயிலின் தாக்கம் இன்னும் குறையாத நிலையில் குடிநீர் தேவை தொடர்ந்து அதிகரித்து ள்ளது.

மேலும் குடிநீர் ஏரிகளிலும் தண்ணீர் இருப்பு வேகமாக குறைந்து வருகிறது. பூண்டி ஏரியில் மொத்த கொள்ளளவான 3.231 டி.எம்.சி.யில் 592 மில்லியன் கனஅடி மட்டுமே தண்ணீர் இருப்பு உள்ளது. இந்தநிலையில் சென்னையில் குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு பூண்டி ஏரியில் இருந்து இணைப்பு கால்வாய் வழியாக புழல், செம்பரம்பாக்கம் ஏரிகளுக்கு நேற்று தண்ணீர் திறந்து விடப்பட்டது. பூண்டி ஏரியில் இருந்து வினாடிக்கு 440 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. குடிநீர் ஏரிகளில் தண்ணீர் இருப்பு குறைந்து வரும் நிலையில் வடகிழக்கு பருவமழை இன்னும் 2 வாரங்களில் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வடகிழக்கு பருவமழை கைகொடுத்தால் மட்டுமே குடிநீர் ஏரிகள் நிரம்பி அடுத்த ஆண்டு தட்டுப்பாடின்றி சென்னையில் குடிநீர் வினியோகம் செய்ய முடியும். புழல் ஏரியில் மொத்த கொள்ளளவான 3.300 டி.எம்.சி.யில் 1.881 டி.எம்.சி தண்ணீர் உள்ளது. ஏரிக்கு இணைப்பு கால்வாய் வழியாக வினாடிக்கு 225 கனஅடி தண்ணீர் வருகிறது. செம்பரம்பாக்கம் ஏரியின் மொத்த கொள்ளளவு 3.645 டி.எம்.சி.யில் 1.258 டி.எம்.சி. தண்ணீர் இருப்பு உள்ளது. ஏரிக்கு இணைப்பு கால்வாய் மூலம் வினாடிக்கு 215 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.

சோழவரம் ஏரியில் மொத்த கொள்ளளவான 1.081 டி.எம்.சி.யில் வெறும் 124 மில்லியன் கனஅடி தண்ணீர், கண்ணன் கோட்டை தேர்வாய் கண்டிகை ஏரியில் 500 மில்லியன் கனஅடியில் 240 மில்லியன் கனஅடி தண்ணீர் இருப்பு உள்ளது. கடலூர் மாவட்டத்தில் உள்ள வீராணம் ஏரியில் மொத்த கொள்ளளவான 1.465 டி.எம்.சி.யில் 545 மில்லியன் கனஅடி தண்ணீர் உள்ளது குறிப்பிடத்தக்கது.

### வணிகச் செய்திகள்

# 'அதிகரிக்கும் வெப்பத்தால் முட்டை உற்பத்தி குறையும் அபாயம்'

**நாமக்கல், அக்.13:** தமிழ்நாடு கோழிப் பண்ணையாளர்கள் சங்கத்தின் சார்பில் உலக முட்டை தினத்தை முன்னிட்டு இலவச முட்டை வழங்கும் விழா நாமக்கல்லில் நடைபெற்றது. இதில் பங்கேற்ற சங்கத் தலைவர் சிங்கராஜ் பின்னர் செய்தியாளர்களிடம் கூறியது:

"உலக முட்டை தினத்தை முன்னிட்டு பொதுமக்களிடையே முட்டையின் ஊட்டச்சத்து நன்மைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பொதுமக்களுக்கு 10 ஆயிரம் முட்டைகள் இலவசமாக வழங்கப்பட்டன. இந்தியாவில் தனிநபர் முட்டை நுகர்வு முன்பு ஆண்டுக்கு சராசரியாக 70 முதல் 80 முட்டைகளாக இருந்த நிலையில் தற்போது 110 முட்டைகளைக் கடந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தென் மாநிலங்களில் சில பகுதிகளில் தனிநபர் நுகர்வு ஆண்டுக்கு 180 முதல் 200 முட்டைகள் வரை உள்ளது. ஆந்திர மாநிலத்தில் பறவைக் காய்ச்சல் பாதிப்பு குறித்த செய்திகள் வெளியாகி வருகிறது. எனினும், தமிழகத்தில் கோழிப் பண்ணைகள் சுகாதாரமான முறையில் பராமரிக்கப்படுகின்றன. கோழிகளுக்குத் தவறாமல் தடுப்பூசிகள் செலுத்தப்படுவதுடன். நோய்த்தொற்று ஏற்படாமல் தடுக்கும் உயிர்ப் பாதுகாப்பு நடைமுறைகளும் பின்பற்றப்படுகின்றன. அதனால் இங்கு பாதிப்பு எதுவும் இல்லை. தீவன பொருட்கள் விலை உயர்வு கோழித் தீவன மூலப் பொருட்களின் விலை தொடர்ந்து உயர்ந்து வருவது பண்ணையாளர்களுக்குப் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

## தோல் பொருட்கள் ஏற்றுமதிக்கு பிரகாசமான வாய்ப்பு

**சென்னை, அக்.13:** மத்திய அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சி கவுன்சில் (சிஎஸ் ஐஆர்) 85-வது ஆண்டு நிறுவன தின கொண்டாட்ட நிகழ்ச்சி சென்னை அடையாறு மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனத்தில் (சிஎல் ஆர்ஐ) நடைபெற்றது. இதில் மத்திய அரசின் தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை செயலர் அமர்தீப் சிங் பாடியா பேசியதாவது: சிஎஸ்ஐஆரின் கீழ் செயல்படும் ஆய்வகங்களில் ஒன்றான சிஎல்ஆர்ஐ நிறுவனத்தில் ஏராளமான தோல் ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. புதிய தொழில்நுட்பங்களும், புதுப்புது தோல் பொருட்களும் உருவாக்கப்பட்டு வருகின்றன. உலகளவில் தோல் பொருட்கள் தயாரிப்பிலும், நுகர்விலும் இந்தியா 2-ம் இடத்தில் உள்ளது. ஐரோப்பிய நாடுகளுடனும், இங்கிலாந்து நாட்டுடனும் இந்தியா தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் (எப்டிஏ) செய்துள்ளது. இதன் காரணமாக இந்தியாவில் தோல்பொருட்கள் ஏற்றுமதிக்கு பிரகாசமான வாய்ப்புகள் உள்ளன என்றார்.




VM
Residential Plots

# KUMARAN HIGHWAY CITY

## KUTHAMBAKKAM, POONAMALLEE




| PLOT NO | EXTENT SQ.FT |
|---|---|
| 1 | 1402 |
| 2 | 938 |
| 3 | 944 |
| 4 | 938 |
| 5 | 941 |
| 6 | 944 |
| 7 | 947 |
| 8 | 953 |
| 9 | 959 |
| 10 | 969 |
| 11 | 981 |
| 12 | 975 |
| 13 | 938 |
| 14 | 950 |
| 15 | 950 |
| 16 | 950 |
| 17 | 950 |
| 18 | 950 |
| 19 | 950 |
| 20 | 950 |
| 21 | 950 |
| 22 | 950 |
| 23 | 950 |
| 24 | 950 |
| 25 | 1518 |
| 26 | 1309 |
| 27 | 1000 |
| 28 | 1000 |
| 29 | 1000 |
| 30 | 1000 |
| 31 | 1000 |
| 32 | 1000 |
| 33 | 1000 |
| 34 | 1000 |
| 35 | 1000 |
| 36 | 1000 |
| 37 | 1000 |
| 38 | 1000 |
| 39 | 988 |
| 40 | 777 |

| PLOT NO | EXTENT SQ.FT |
|---|---|
| 41 | 972 |
| 42 | 972 |
| 43 | 960 |
| 44 | 948 |
| 45 | 960 |
| 46 | 960 |
| 47 | 627 |
| 48 | 816 |
| 49 | 934 |
| 50 | 1080 |
| 51 | 1188 |
| 52 | 948 |
| 53 | 960 |
| 54 | 640 |
| 55 | 1678 |
| 56 | 1449 |
| 57 | 1031 |
| 58 | 630 |
| 59 | 681 |
| 60 | 693 |
| 61 | 693 |
| 62 | 693 |
| 63 | 489 |
| 64 | 384 |
| 65 | 600 |
| 66 | 600 |
| 67 | 600 |
| 68 | 588 |
| 69 | 588 |
| 70 | 600 |
| 71 | 600 |
| 72 | 495 |
| 73 | 384 |
| 74 | 459 |
| 75 | 682 |
| 76 | 658 |
| 77 | 642 |
| Commercial 1 | 4637 |
| Commercial 2 | 10148 |

## INDUSTRIAL PRESENCE AND DEVELOPMENT CLOSER TO THE LAND

NISSAN HYUNDAI SAINT-GOBAIN GLASS apollo SAMSUNG PERLOS FOXCONN
JABIL caparo NOKIA Connecting People DELL MOTOROLA FLEXTRONICS

# Valli Mayil Properties

130/4B, Redhills Road, 1st Floor, Pudur, Ambattur, Chennai-53.
muthaiah.kvb@gmail.com
www.vallimayilproperties.com

Contact
9080420748

## குலசை தசரா திருவிழா

# துர்க்கை அம்மன் திருக்கோலத்தில் முத்தாரம்மன் வீதி உலா




**குலசேகரன்பட்டினம், அக் .13:** தூத்துக்குடி மாவட்டம் குலசேகரன்பட்டினம் ஞானமூர்த்தீஸ்வ ரர் உடனுறை முத்தாரம்மன் கோவிலில் ஆண்டுதோறும் நடைபெறும் தசரா திருவிழா பிரசித்தி பெற்றது. இந்தியாவில் கர்நாடக மாநிலம் மைசூருவுக்கு அடுத்தபடியாக இங்குதான் தசரா திருவிழா கோலாகலமாக கொண்டாடப்படுகிறது.

அந்த வகையில் இந்த ஆண்டுக்கான தசரா திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் தொடங்கியது. அதிகாலை 5 மணிக்கு கோவில் கொடிமரத்தில் கொடியேற்றப்பட்டது. அப்போது அங்கு கூடியிருந்த திரளான பக்தர்கள் 'ஓம் காளி, ஜெய் காளி என்று விண்ணதிர பக்தி கோஷங்களை எழுப்பி வழிபட்டனர். தொடர்ந்து பல்வேறு நாட்கள் விரதம் இருக்கும் பக்தர்களின் வலது கையில் காப்பு எனும் மஞ்சள் கயிற்றை பூசாரி கட்டி விட்டார்.

பல்வேறு ஊர்களில் இருந்தும் விரதமிருந்து கோவிலுக்கு வந்த திரளான பக்தர்கள் காப்பு அணிந்தனர். கோவிலுக்கு வந்த குருசாமிகள் மொத்தமாக காப்புகளை வாங்கி சென்று, தங்களது ஊரில் விரதமிருக்கும் பக்தர்களுக்கு அணிவித்தனர்.

தொடர்ந்து நேர்த்திக்கடனாக பல்வேறு வேடங்களை அணிந்த பக்தர்கள் காணிக்கை வசூலிக்க தொடங்கினர். இதுதவிர கடற்கரையில் குவிந்த பக்தர்கள், கடலில் புனித நீராடினர். பின்னர் தங்களது ஊரில் உள்ள தசரா பிறையில் தெளித்து வழிபடுவதற்காக குடத்தில் கடலில் இருந்து புனிதநீரை எடுத்து சென்றனர்.

திருவிழாவின் முதல் நாளான நேற்று காலை, மதியம்,இரவில் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், தீபாராதனை நடைபெற்றது. இரவில் அம்மன் வாகனத்தில் துர்க்கை திருக்கோலத்தில் எழுந்தருளி வீதி உலா சென்று பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

தொடர்ந்து 12 நாட்கள் நடைபெறும் விழா நாட்களில் தினமும் இரவில் அம்மன் பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி வீதி உலா சென்று பக்தர்களுக்கு காட்சி அளிக்கின்றார். விழாவின் சிகர நிகழ்ச்சியான மகிஷா சூரசம்ஹாரம், 10-ம் திருநாளான வருகிற 20-ந்தேதி (செவ்வாய்க்கிழமை) இரவு 12 மணிக்கு நடைபெறுகிறது.

விழாவுக்கான ஏற்பாடுகளை கோவில் நிர்வாகத்தினர் செய்து வருகின்றனர்.

# கூட்டணிக் கட்சிகளை அவமதித்ததுதான் திமுக தோல்விக்கு காரணம்: மாணிக்கம் தாகூர் கருத்து



**சென்னை, அக்.13:** வரலாறு காணாத ஊழல், சட்டம் ஒழுங்கு சீர்குலைவு, பெண்களுக்கு எதிரான தவறான பேச்சுகள், கூட்டணிக் கட்சிகளை அவமதித்துதான் திமுகவின் உண்மையான தோல்விக்குக் காரணம் என தமிழக காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளப் பக்கத்தில், "திமுக தோல்விக்கு ஊழல், சட்டம் ஒழுங்கு சீரழிவு, பெண்களைப் பற்றி தவறாகப் பேசிய பேச்சுகள் மற்றும் கூட்டணிக் கட்சிகளை நடத்திய விதம்தான் காரணம். 21.2.2026 அன்று மதுரையில் நடைபெற்ற திமுக தென் மண்டல வாக்குச்சாவடிக் குழு உறுப்பினர்களுக்கான 'என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி' பயிற்சி மாநாட்டில் பேசிய திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், சிறப்பு வாக்காளர் திருத்தப் பணிகள் (எஸ்ஐஆர்) மூலம் பல்வேறு மாநிலங்களில் வாக்காளர்கள் நீக்கப்பட்டனர்.

ஆனால், தமிழ்நாட்டில் யாருடைய வாக்குகளையும் நீக்க விடாமல், பம்பரமாக உழைத்த இயக்கம் திமுக. தமிழ்நாடு முழுவதும், திமுக சார்பில் நியமிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி நிலை முகவர்களான BLA2-க்களைச் சந்தித்து வருகிறேன். திமுக சார்பில் 75,032 BLA2-க்கள், 5,50,000 வாக்குச்சாவடிக் குழு உறுப்பினர்கள் (BLC), 75,032 வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள் (BDA) உள்ளனர். வரும் சட்டமன்றத் தேர்தலில் திமுகவின் வெற்றியை உறுதி செய்யப் போவது இந்த 7 லட்சம் பேர்தான் என்றார்.

ஆனால், 2026 சட்டமன்றத் தேர்தலிலும் தற்போது நடைபெற்ற இடைத்தேர்தல்களிலும் மக்கள் திமுகவை முற்றிலுமாகப் புறக்கணித்துத் தோல்வியைத் தந்தவுடன், இப்போது எஸ்ஐஆர் மூலம் வாக்காளர்கள் நீக்கப்பட்டதே தங்களது தோல்விக்குக் காரணம் என்று திமுகவின் செய்தித் தொடர்பாளர்கள் பேசி வருகின்றனர். தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் எவ்வாறு நடைபெற்றன என்பதற்கு, அன்றைய முதலமைச்சராக இருந்த மு.க.ஸ்டாலின் மதுரைக் கூட்டத்தில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து விட்டார்.

வரலாறு காணாத ஊழல், சட்டம் ஒழுங்கு சீர்குலைவு, பெண்களுக்கு எதிரான தவறான பேச்சுகள், கூட்டணிக் கட்சிகளை அவமதித்துதான் திமுகவின் உண்மையான தோல்விக்குக் காரணம். இப்போதுகூட எஸ்ஐஆரை எதிர்ப்பதாக திமுக செய்தித் தொடர்பாளர்கள் பேசி வருகிறார்களே தவிர, தலைமைத் தேர்தல் ஆணையர் பதவி விலகக் கோரி நடைபெறும் போராட்டத்தில் திமுக எம்பிக்கள் பங்கேற்கவில்லை. தமிழ்நாட்டில் உள்ள இடதுசாரிக் கட்சிகள், விசிக, மதிமுக ஆகிய கட்சிகளின் தலைவர்கள் டெல்லிப் போராட்டத்தில் கலந்து கொண்டு கைதானார்கள்.

ஆனால், திமுக சார்பில் ஒரு எம்பி கூட பங்கேற்கவில்லை. இதற்கு என்ன காரணம்? எஸ்ஐஆருக்கு எதிரான போராட்டத்தில் பங்கேற்றால் பாஜகவை பகைத்துக்கொள்ள நேரிடும் என்ற அச்சம்தான் இதற்குக் காரணம்.

தமிழ்நாட்டின் நலன், ஜனநாயகம், மதச்சார்பின்மை ஆகியவற்றில் திமுகவுக்கு உண்மையிலேயே அக்கறை இருந்தால், தலைமைத் தேர்தல் ஆணையர் பதவி விலகக் கோரி நடைபெறும் போராட்டத்தில் பங்கேற்க வேண்டும். மாறாக, தமிழ்நாட்டில் வாக்காளர்கள் நீக்கப்படுவதைத் தடுத்துவிட்டதாகப் பேசிவிட்டு, இப்போது வாக்காளர்கள் நீக்கப்பட்டதே திமுகவின் தோல்விக்குக் காரணம் என்று கூறுவதை மக்கள் ஏற்க மாட்டார்கள்" என்று அவர் தெரிவித்துள்ளார்

## சீர்காழி எம்எல்ஏ செந்தில் செல்வனுக்கு எதிரான தேர்தல் வழக்கு தள்ளுபடி

**சென்னை, அக்.13:** நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் சீர்காழி (தனி) தொகுதியில் திமுக கூட்டணியில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்ட மதிமுக வேட்பாளர் செந்தில் செல்வன் 11,417 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார். இவரது வெற்றியை எதிர்த்து வாக்காளர் வாசு என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் தேர்தல் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

தனக்கு எதிரான தேர்தல் வழக்கை நிராகரிக்கக் கோரி செந்தில் செல்வன் மனு தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கை திரும்பப் பெறுவதாக வாக்காளர் தரப்பில் ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில்,வழக்கு நீதிபதி டி.பரதசக்கரவர்த்தி முன் இன்று விசாரணைக்கு வந்தபோது, செந்தில் செல்வனுக்கு எதிரான தேர்தல் வழக்கை திரும்பப் பெற அனுமதித்து வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

தேர்தல் வழக்கு தொடர்ந்த மனுதாரர், மனுவைத் திரும்பப் பெற முன்வந்ததால், ஆட்சேபனைகள் தெரிவிக்கவும், வேறு யாரேனும் வழக்கு தொடரவோ உயர் நீதிமன்றம் 15 நாட்கள் அவகாசம் வழங்குவது வழக்கம்.

செந்தில் செல்வன் வெற்றிக்கு எதிராக ஆட்சபனையோ, தேர்தல் வழக்கோ தொடர யாரும் முன்வராததால், இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஏமன் சென்ற படகு கவிழ்ந்ததில் 109 அகதிகள் உயிரிழப்பு

## மாயமான 116 பேரை தேடும் பணி தீவிரம்



**ஏமன், அக்.13:** ஏமன் நாட்டை நோக்கிச் சென்ற அகதிகள் படகு ஜிபூட்டி கடற்கரை அருகே கவிழ்ந்த விபத்தில், 15 குழந்தைகள் உட்பட 109 பேர் உயிரிழந்தனர். மேலும் காணாமல் போன 116 பேரைத் தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருவதாக அனைத்து சர்வதேச அகதிகள் அமைப்பான ஐஓஎம் நேற்று தெரிவித்துள்ளது.

சுமார் 350 பேருடன் சென்ற அந்தப் படகு அக்டோபர் 8 மற்றும் 9 ஆகிய தேதிகளுக்கு இடைப்பட்ட இரவில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜிபூட்டி நாட்டின் துறைமுக நகரான ஓபோக்கிற்கு வடக்கே உள்ள குஹெரே பகுதிக்கு அருகில் இந்தத் துயரச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இந்த விபத்தில் 80 பேருக்கும் அதிகமானோர் உயிர் பிழைத்துள்ளனர். உயிர் பிழைத்த அனைவரும் எத்தியோப்பிய நாட்டைச் சேர்ந்தவர்கள். விபத்துக்கான காரணங்கள் உடனடியாகத் தெரியவில்லை.

எத்தியோப்பிய அரசுத் தரப்பிலிருந்தும் தகவல் வெளியிடப்படவில்லை. ஆப்பிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு இடையே ஆபத்தான கடல் வழிகளில் அகதிகள் பயணம் செய்யும்போது இதுபோன்ற கோர விபத்துகள் தொடர்ந்து அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

## எரிசக்தி' போர் நிறுத்தத்துக்கு

# ரஷ்யாவும் உக்ரைனும் ஒப்புதல்: ட்ரம்ப் தகவல்

**வாஷிங்டன், அக்.13:** அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் சமூக வலைதள பதிவில், "ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையிலான போரில் எரிசக்தி போர் நிறுத்தம் அமலுக்கு வந்துள்ளது. இரு தரப்பும் அதற்கு ஒப்புதல் தெரிவித்துள்ளன. அதை முறித்துக் கொள்ள வேண்டாம்" என்று ட்ரம்ப் தெரிவித்தார்.

அமெரிக்கா உட்பட சர்வதேச அளவில் எரிபொருள் விலை உயர்ந்துள்ளது. இந்த நிலையை சமாளிக்கும் வகையில் ரஷ்யாவில் இருந்து டீசலை இறக்குமதி செய்ய அமெரிக்கா முன்வந்துள்ளது. இதை ட்ரம்ப் அண்மையில் அறிவித்தார். 'சர்வதேச நாடுகளின் சந்தைகளுக்கு டீசலை விநியோகம் செய்ய ரஷ்யா சம்மதம் தெரிவித்துள்ளது' என்று ட்ரம்ப் தெரிவித்தார். இந்த நிலையில் எரிசக்தி போர்நிறுத்தம் குறித்த அறிவிப்பை அவர் வெளியிட்டுள்ளார்.

"ட்ரம்ப் அறிவித்துள்ள எரிசக்தி போர் நிறுத்தம் குறித்து நாங்கள் விவாதித்தோம். உக்ரைன் இதை ஆதரிக்கிறது. அதே நேரத்தில் இதை ரஷ்யாவும் ஆதரிக்க வேண்டும். அதற்கான தகவலை அமெரிக்க தரப்பு தெரிவிக்க வேண்டும்" என்று உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி தெரிவித்தார்.

இந்தச் சூழலில் எரிசக்தி போர்நிறுத்தம் குறித்து ரஷ்ய அரசு இதுவரை எந்த தகவலும் தெரிவிக்கவில்லை. இந்நிலையில், ட்ரம்ப்பின் அறிவிப்புக்கு பிறகு உக்ரைனின் கீவ் நகரில் உள்ள எரிசக்தி அமைப்பு மீது ரஷ்யா, ட்ரோன் மூலம் தாக்குதல் நடத்தியதாக கூறியுள்ளார்.

முன்னதாக, உக்ரைன் அதிபரை மாற்ற வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று ட்ரம்ப் தெரிவித்திருந்தார். ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையிலான போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கையை அவர் திறம்பட மேற்கொள்ளவில்லை என்று குற்றச்சாட்டு வைத்தார்.

இது தொடர்பாக ட்ரம்ப்புக்கு பதில் அளித்த ஜெலன்ஸ்கி, "எங்களுக்கு இரண்டு மாத காலம். அதவாது 60 நாட்கள் ஒட்டுமொத்த போர்நிறுத்த சூழலை ஏற்படுத்திக் கொடுத்தால் நாங்கள் தேர்தலை நடத்துவோம். அதன் மூலம் உக்ரைன் மக்களின் தேர்வை ஏற்போம். இது (அதிபரை தேர்வு செய்வது) எங்கள் நாட்டு மக்களின் முடிவில் தான் உள்ளது" என்றார்.






சிகரத்தின்
# தினத்தென்றல்

RNI: NO TNTAM/2013/55872 Postal R.No: TN/CC(S)DN/525/15-17
E.MAIL: dhinathendral@gmail.com Ph:044 - 79690504, 98400 83174




### அரிசி, பருப்பு விலை உயர்வு

# தமிழக அரசு அலட்சியம் காட்டுகிறது

## அன்புமணி குற்றச்சாட்டு



**சென்னை, அக்.13:** "அலட்சியப் போக்கை கைவிட்டு, அரிசி, பருப்பு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் விலையை கட்டுப்படுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று பாமக தலைவர் அன்புமணி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், "தமிழகத்தில் அரிசி விலை நாளுக்கு நாள் அதிகரித்து, அன்றாட பயன்பாட்டுக்கான அரிசியே கிலோ ரூ.77 என்ற உச்சத்தை அடைந்திருக்கிறது.

கடந்த ஜூலை மாதம் முதல் இப்போது வரையிலான 3 மாதங்களில் அரிசி விலை கிலோவுக்கு ரூ.27 வரையிலும், 26 கிலோ மூட்டை ரூ.700 வரையிலும் உயர்ந்திருக்கும் நிலையில், அதைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்காமல், அரிசி விலை உயரவே இல்லை என்று உணவுத் துறை அமைச்சர் கூறி வருவது கண்டிக்கத்தக்கது.

தமிழகத்தில் கடந்த ஜூலை மாதம் ரூ.1,100 ஆக இருந்த 26 கிலோ எடை கொண்ட சாதாரண ரக புழுங்கல் அரிசி மூட்டை விலை இப்போது ரூ.1,800 ஆக உயர்ந்திருக்கிறது. அதாவது இந்த வகை அரிசியின் விலை கிலோ ரூ.42-லிருந்து ரூ.70 ஆக அதிகரித்திருக்கிறது.

அதேபோல், பொன்னி புழுங்கல் அரிசி மூட்டை விலை ரூ.1,400-லிருந்து ரூ.1,900 ஆகவும், ஆந்திரா மற்றும் கர்நாடகத்திலிருந்து வரும் சோனா மசூரி அரிசி மூட்டை விலை ரூ.1,400-லிருந்து ரூ.2,000 ஆகவும் அதிகரித்திருக்கிறது.

அதேபோல், விருதுநகர் மொத்த விற்பனை சந்தையில் துவரம் பருப்பு 100 கிலோ மூட்டை விலை ரூ.13,200-லிருந்து ரூ.600 உயர்ந்து ரூ.13,800 ஆக அதிகரித்துள்ளது. நயம் உளுந்தம் பருப்பு 100 கிலோ மூட்டை கடந்த வாரம் ரூ.9,100 முதல் ரூ.9,200 வரை விற்கப்பட்ட நிலையில் இந்த வாரம் மூட்டைக்கு ரூ.1,100 உயர்ந்து, ரூ.10,200 முதல் ரூ.10,400 வரை விற்பனை செய்யப்படுகிறது.

சில்லறை விலையில் ஒரு கிலோ அரிசி ரூ.27 வரையிலும், துவரம் பருப்பு கிலோவுக்கு ரூ.6, உளுத்தம் பருப்பு ரூ.11 வீதமும் உயர்ந்துள்ள நிலையில், அதனால் ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

மக்களை பாதிக்கும் அரிசி விலையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கடந்த ஜூலை 22-ம் தேதியும், செப்டம்பர் 27-ம் தேதியும் அறிக்கை வெளியிட்டிருந்தேன். ஆனால், அரிசி விலையை கட்டுப்படுத்த எந்த நடவடிக்கையையும் தமிழக அரசு எடுக்கவில்லை. மாறாக, அரிசி உள்ளிட்ட 11 அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை கண்காணித்து வருகிறோம்; அரிசி விலை உயரவே இல்லை; இது எதிர்க்கட்சிகளால் கட்டமைக்கப்படும் பொய்யான பிம்பம் தான் என்று உணவுத்துறை அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

அரிசி விலை கிலோவுக்கு ரூ.27 வரை உயர்ந்திருப்பதால் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில், அரிசி விலையே உயரவில்லை என்று கூறுவது மிகவும் ஆபத்தானது. இத்தகைய அலட்சியப் போக்கை கைவிட்டு, அரிசி, பருப்பு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களில் விலைகளைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று அன்புமணி வலியுறுத்தியுள்ளார்.

### காலி மது பாட்டிலை பெறும் இயந்திரம் நிறுவ டெண்டர்!

# இறுதி முடிவெடுக்க தமிழக அரசுக்கு தடை!



**சென்னை, அக்.13:** டாஸ்மாக் மதுபாட்டில்களை திரும்பப் பெற, ரிவர்ஸ் வெண்டிங் மெஷின்களை நிறுவுவதற்கான டெண்டர் மீது இறுதி முடிவு எடுக்க கூடாது என தமிழக அரசுக்கு சென்னை உயர்நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காக, டாஸ்மாக் மதுபான கடைகளில் விற்கப்படும் பாட்டில்களை திரும்பப் பெறும் திட்டம், மாநிலம் முழுவதும் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த திட்டத்தின் கீழ், காலி பாட்டில்களை திரும்பப் பெறுவதற்காக, ரிவர்ஸ் வெண்டிங் மெஷின்களை அமைத்து இயக்க, கடந்த ஆகஸ்ட் 31 ஆம் தேதி டெண்டர் கோரப்பட்டது.

இந்த டெண்டருக்கு தடை விதிக்கக் கோரி, பாட்டில் வியாபாரிகள் நலச்சங்கம் சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்த மனுவில், மாநிலம் முழுவதற்கும் சேர்த்து ஒரே நிறுவனத்தை இப்பணிக்கு நியமிக்க இருப்பதாகவும், ஏழு ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் வழங்கப்படும் என்றும், பின்னர் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்படும் என்றும் டெண்டர் படிவத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த டெண்டரை ரத்து செய்து, மாவட்ட அளவில் காலி பாட்டில்கள் சேகரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளோரும் பங்கேற்கும் வகையில் டெண்டர் நிபந்தனைகளை திருத்த உத்தரவிட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு, நீதிபதி என். செந்தில்குமார் முன் விசாரணைக்கு வந்தபோது, தமிழக அரசுத் தரப்பில் ஆஜரான தலைமை வழக்கறிஞர், டெண்டர் படிவங்களை சமர்ப்பிக்க அக்டோபர் 22 ஆம் தேதி கடைசி நாள் எனவும், அன்றைய தினம் மாலை தொழில்நுட்ப டெண்டர் திறக்கப்படும் என்றும் தெரிவித்தார். மேலும், டெண்டர் நிபந்தனைகளை பூர்த்தி செய்வோர், டெண்டரில் கலந்து கொள்ள எந்த தடையும் இல்லை எனத் தெரிவித்தார்.

இதையடுத்து, இந்த டெண்டரில் எத்தனை பேர் பங்கேற்றனர்? என்பது குறித்து அறிக்கை தாக்கல் செய்யும்படி அரசுக்கு உத்தரவிட்ட நீதிபதி, டெண்டரை திறக்கலாம்; இறுதி முடிவு எடுக்கக் கூடாது என உத்தரவிட்டு, வழக்கை அக்டோபர் 26 ஆம் தேதிக்கு தள்ளி வைத்தார்.

# சிவகாசியில் தீபாவளி பட்டாசுகள் விற்பனை மும்முரம்: 4 வாரங்களே உள்ள நிலையில் வெளியூர் மக்கள் ஆர்வம்



**சிவகாசி, அக்.13:** தீபாவளி பண்டிகைக்கு இன்னும் 4 வாரங்களே உள்ள நிலையில், தமிழகம் முழுவதும் இருந்து பட்டாசு வாங்குவதற்காக சிவகாசிக்கு மக்கள் வருவதால் பட்டாசு விற்பனை மும்முரம் அடைந்துள்ளது.

சிவகாசி சுற்றுவட்டாரப் பகுதியில் உள்ள பட்டாசு ஆலைகளில் தீபாவளிக்காக ஆண்டு முழுவதும் பட்டாசு உற்பத்தி செய்யப்படுகிறது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் பட்டாசு உற்பத்தி நடந்தாலும் சிவகாசியில் உற்பத்தி செய்யப்படும் பட்டாசுக்கு நாடு முழுவதும் தனி மதிப்பு உள்ளது.

நாட்டின் மொத்த பட்டாசு தேவையில் 90 சதவீதத்துக்கு மேல் சிவகாசி பகுதியில் உள்ள ஆலைகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன. சிவகாசியில் நிரந்தர உரிமம் பெற்ற 3,500-க்கும் மேற்பட்ட பட்டாசு விற்பனைக் கடைகள் உள்ளன. விதிமுறைகள், கட்டுபாடுகள் காரணமாக பட்டாசுகளை ஓரிடத்தில் இருந்து வேறொரு இடத்துக்குக் கொண்டு செல்வதற்கான போக்குவரத்துக் கட்டணம் அதிகம் என்பதால், நாட்டின் பிற பகுதிகளில் விற்பனைக்கு வரும்போது பட்டாசு விலை அதிகரிக்கிறது. ஆனால், உற்பத்தி செய்த இடத்திலேயே விற்பனை செய்யப்படுவதால், சிவகாசியில் உள்ள பட்டாசு விற்பனைக் கடைகளில் விலை குறைவாக பட்டாசு கிடைக்கிறது. தமிழகத்தில் விருதுநகர் மாவட்டத்தில் மட்டுமே நிரந்தரப் பட்டாசு கடைகளுக்கான உரிமம் வழங்கப்படுகிறது. அதிகத் தள்ளுபடி, புது ரக பட்டாசுகள், நேரடியாக வெடித்துப் பார்த்து வாங்கலாம் என்பதால் தமிழகம் மட்டுமின்றி கேரளா, கர்நாடக, ஆந்திர மாநில மக்களும் சிவகாசிக்கு நேரடியாக வந்து பட்டாசு வாங்குவதை விரும்புகின்றனர்.

தீபாவளிக்கு இன்னும் 4 வாரங்களே உள்ள நிலையில் பட்டாசு வாங்குவதற்காக வெளியூர் மக்கள் சிவகாசிக்கு அதிகளவில் வந்துள்ளதால் விற்பனை மும்முரம் அடைந்துள்ளது. இதனால் சிவகாசி நகர் பகுதி மட்டுமின்றி சாத்தூர் சாலை, விருதுநகர் சாலை உள்ளிட்ட பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் அதிகரித்துள்ளது.

இது குறித்து பட்டாசு விற்பனையாளர்கள் கூறுகையில், "ஆடிப்பெருக்கு அன்று தீபாவளி பட்டாசு சிறப்பு விற்பனை தொடங்கியது. தொடக்கத்தில் ஆர்டர்கள் குறைவாக வந்த நிலையில், கடந்த வாரம் தொடர் விடுமுறையை ஒட்டி வெளி மாவட்டங்களில் இருந்து சிவகாசிக்கு பட்டாசு வாங்க வந்தனர். தீபாவளி நெருங்கி விட்டதால் இந்த வாரம் வெளி மாவட்ட மக்கள் வருகை அதிகரித்து பட்டாசு விற்பனை மும்முரம் அடைந்துள்ளது. ஆயுத பூஜைக்குப் பின் பட்டாசு விற்பனை களைகட்டும்", என்றனர்.




Owned, Printer and Published by G.SASIREKA. Published from No:28, 2nd Avenue, Ashok Nagar, Chennai-83 Printing at Annai Abirami Achagam, No. 24, Vengu Chetty Street, Punga Nagar, Chennai - 600 003. Editor: S.SENTHILKUMAR, Office: No:9, 4th Block, Veeramamunivar Street, Mogappair East, Chennai - 37.